# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 21/2017**

Prosecution witness : 3

| | |
|---|---|
| Name: முத்தரசு | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 10.01.2025**

**முதல் விசாரணை**:

நான் தற்போது நீலகிரி மாவட்டம் சமூகநீதி மற்றும் மனிதஉரிமை கூடுதல் பொறுப்பு குன்னூர் உட்கோட்டம் துணைக்காவல் கண்காணிப்பாளராக பணியில் உள்ளேன். கடந்த 23.09.2016 ம் தேதி நான் அலுவலில் இருந்தபோது உதவி ஆய்வாளர் திருமதி.விக்டோரியா லூர்துமேரி தனக்கு தகவலாளி கஞ்சா தொடர்பான தகவல் தெரிவித்ததாகவும் நடவடிக்கை எடுக்க சொல்வதாக தகவல் தெரிவித்தார். மேலும் சம்பவ இடம் செல்ல அனுமதி பெற்று சம்பவ இடம் சென்று எதிரியை தகவலாளி அடையாளம் காட்டியபின்னர் எதிரியை காரணம் கூறி கைது செய்து, அவரிடம் இருந்த கஞ்சா பொருளை சோதனை சம்மத கடிதம் பெற்று சோதனை செய்து, அத்தாட்சியில் கைப்பற்றியும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும், எதிரி மற்றும் தடய பொருளுடன் நிலையம் ஆஜராகி

பிரிவு-57 ன் படியான அறிக்கையை அளித்தார். நான் எதிரியை முறைப்படி உச்சநீதிமன்ற கட்டளையை பின்பற்றி எதிரியின் உறவினருக்கு தகவல் தெரிவித்தேன். எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் தடய பொருளை 13.10.2016 ம் தேதி கனம் நீதிமன்ற நடுவர் அவர்களுக்கு பகுப்பாய்வுக்கு அனுப்பகோரி வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். பின்னர் உதவி ஆய்வாளர் திருமதி.விக்டோரியாலூர்துமேரி, தலைமைக்காவலர்-ராமசாமி, ரெங்கசாமி ஆகியோரை 23.09.2016 ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.10.2016 ம் தேதி சிறப்பு முதன்மை நீதிமன்ற தலைமை எழுத்தர் -திருமதி.பத்மினி அவர்களை விசாரணை செய்தேன். அன்றைய தினம் காவலர்-முனீஸ்வரன் மற்றும் பகுப்பாய்வு அறிக்கை வழங்கிய அறிவியல்அலுவலக பகுப்பாய்வினர் திரு.இராமச்சந்திரன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விசாரணையை முடித்து 30.11.2016 ம் தேதி எதிரியின் மீது சட்டபிரிவு 8(c), 20(b)(ii)(B)NDPS ACT ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். காவல் ஆய்வாளர் அவர்கள் பகுப்பாய்வு செய்யக்கோரி நீதிமன்றத்திற்கு அனுப்பிய பகுப்பாய்வு வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.9** ஆகும். கைப்பற்றிய சொத்தினை பகுப்பாய்வு செய்யக்கோரி தடய அறிவியல் ஆய்வகத்திற்கு நீதிமன்றம் அனுப்பி கடிதம் **அ.சா.ஆ.10** ஆகும். பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.11** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் தகவலை தனி அறிக்கையாக தயார் செய்வதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். NIB யூனிட்டில் சார்பு ஆய்வாளருக்கு மேல் ஆய்வாளர் மற்றும் துணைக்கண்காணிப்பாளர் உள்ளார்கள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவித்ததாக சார்பு ஆய்வாளர் தெரிவித்துள்ளார் அந்த உயர் அதிகாரியின் பதவி குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.4

ல் சார்பு ஆய்வாளர் மேற்படி தகவல் பெறப்பட்டு உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் தகவலானது பொதுநாட்குறிப்பில் பதிவு செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பொது நாட்குறிப்பின் நகலை நான் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். தராசில் பலவகைகள் உண்டு என்றால் சரிதான். எந்த வகையான தராசை கொண்டுசென்றோம் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் சாட்சியாக நாங்கள் கையொப்பம் போட்டோம் என்று சாட்சி ராமசாமி மற்றும் ரெங்கசாமி எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி ஆவணத்தில் எந்தவகையான சீல் வைக்கப்பட்டது என குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். மாதிரிசொத்துகள் மீதும் மற்றும் மீதம் உள்ள சொத்துகள் மீதும் நூல் கட்டப்பட்டு சீலிடப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் சொத்துக்கள் மீது சாட்சிகள் மற்றும் எதிரி மற்றும் கைப்பற்றிய அதிகாரி கையொப்பம் போட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக காவல்துறையில் அலுவல் சம்பந்தமாக கையொப்பம் இடும்போது தேதி குறிப்பிடப்படவேண்டும் என்றால் சரிதான். அத்தாட்சி, சோதனை சம்மதக்கடிதம் மற்றும் ஆவணங்களில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் உதவி ஆய்வாளர் கையொப்பம் இட்டு தேதி குறிப்பிட்டுள்ளார். சாட்சிகளிடம் ஏற்கனவே வெற்று தாளில் கையொப்பம் பெறப்பட்டு பின்னர் ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது விசாரணையில் சொத்தானது பாலிதீன் உறையில் வைத்து தயார் செய்யப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்தானது நீதிமன்ற நடுவரிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். படிவம்-91 ஐ சார்பு ஆய்வாளர் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான்.

ஆய்வு நமூனாவும், கைதுகுறிப்பாணையும் நான் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்தானது கைப்பற்றப்பட்ட தேதியிலிருந்து 21 நாட்கள் கழித்துதான் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். எனது விசாரணையில் பகுப்பாய்வாளர் பாலிதீன் உறையில் வைத்து அதன் மேல் காக்கி உறையில் வைத்து மாதிரி அனுப்பப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பகுப்பாய்வு அறிக்கையிலும் பாலிதீன் உறையில் வைத்து வந்ததாகத்தான் உள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்திலிருந்து சம்பவ இடம் செல்லும்போது தனி நபர் சாட்சிகளை அழைத்து சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து தனி நபர் சாட்சிகளை அழைத்ததாக எனது விசாரணையில் சாட்சிகள் யாரும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வரமறுத்த சாட்சிகள் மீது குற்றநடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லை என்பதற்கும் யாரும் முன் வரவில்லை என்பதற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் நேரம் திருத்தப்பட்டு வெள்ளைமையினால் அழிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் பஸ்நிறுத்தம் அருகில் என்று சொல்லப்பட்டுள்ளது. பஸ்நிறுத்ததில் இருந்து எந்த திசை, எவ்வளவு துாரம் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் பார்வை மகஜர், வரைபடம் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மதக்கடிதம், அத்தாட்சியில் எதிரிகள் நகல் பெற்றுக்கொண்டதாக ஒப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் மாதிரி சீல் வைக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னபடி இந்த வழக்கின் ஆவணங்கள் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றும் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் நான் சொன்னபடி , சொன்ன நேரத்தில் , சொன்ன

இடத்தில் வைத்து சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் வாக்குமூலங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் எதிரியின் மீது பொய்யான குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.